**தலைப்பு 424 – வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தேவைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 7.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றின் மீதி கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரமான மீதிக்கும், ஆண்டின் இறுதியில் கட்டுநிதி மீதியின் கூட்டுத்தொகைக்கும் சமனாக இருக்க வேண்டும். 2020 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டுரீதியிலான தொகைகளும் அதன் பிரகாரம் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது 2020 ஆம் ஆண்டின் தொகைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதிநிலைமைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக மீண்டும் சீராக்கப்பட்ட மீதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அரச கணக்குகள் திணைக்களம் மூலம் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான சீராக்கல் கணக்கின் மீதியில் காண்பிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்படாதிருந்தமையால் அந்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரச கணக்குகள் 253-1-2-4-1502 இன் கீழ் | | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் CIGAS டெக்ஸ்டொப் ஈடுபடுத்தல் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதி எந்தவித மாற்றங்களுமின்றி பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சின் பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 2,198,609 ஆக இருந்த போதும் ரூபா 2,336,499 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பணக் கணக்கின் தீர்ப்பனவே காண்பிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 137,890 வரவு மீதி முற்பணக் கொடுப்பனவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டெழும் செலவினம்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | எதிர்கால சேவையினை நிறைவேற்றும் பங்களிப்பை எதிர்பார்த்து வளங்களுக்காக செலவிடப்படுகின்ற காசு வெளிப்பாய்ச்சலின் அளவு முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து ஏற்படுகின்ற காசுப்பாய்ச்சல் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமையால் அந்த காசுப்பாய்ச்சலை தனியாக வெளிப்படுத்துதல் முக்கியமானதாகும். அதன் பிரகாரம் மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், இயலுமை மேம்பாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 2,504,734 ஆன செலவினம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், மூலதன செலவினமாக காண்பிக்கப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து ஏற்படுகின்ற காசுப்பாய்ச்சல் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாயய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | அமைச்சின் பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய தலைப்புகளுக்காக அறிக்கையிட்ட நிறுவனத்தால் செய்யப்பட்ட செலவினம் ரூபா 37,890 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி இணக்கக் கூற்றில் ரூபா 60,000 சீராக்கப்பட்டிருந்தும் ரூபா 22,110 வேறுபாடு அவதானிக்கப்பட்து. | பட்டதாரிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 20,000 படி வரவு வைத்தல் ரூபா 60,000 ஆகவும், அந்த உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் சம்பளம் செலுத்தும் போது செலுத்தப்பட்ட படிக்காக மேற்கொளள்ப்பட்ட சீராக்கம் செலவு வைத்தலாக ரூபா 160,000 காண்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் பரீட்சை மீதியில் செய்யப்பட்ட செலவினமாக ரூபா 137,890 தொகை (வரவு) காண்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் ஏனைய தலைப்புகளுக்காக செய்யப்பட்ட செலவினம் சீராக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ACA – 6 அட்டவணையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் அமைச்சின் நிதியல்லா சொத்துக்கள் ரூபா 13,517,923 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அமைச்சின் நிதியல்லா சொத்துக்கள் ரூபா 52,317,923 ஆனமையால் ரூபா 38,800,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் பொதுத் திறைசேரி (தலைப்பு இலக்கம் 992) இன் மூலம் அமைச்சிற்கு ரூபா 38,800,000 சொத்துக்கள் குறிபிடப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் அமைச்சிடம் இல்லாமையினால் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் மீதி திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் மீதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 30 செலவின விடயங்களில் 24 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை, நிதி அமைச்சின் அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் போக்குவரத்துச் செலவினங்களை நிறுத்திவைத்தமை போன்ற விடயங்கள் இதற்கான காரணங்களாகும். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான திட்டமொன்றுடனும் முகாமைத்துவத்துடனும் மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான | நிதிநிலைமைக் கூற்றின் இறுதியில் ‘‘நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிக்கையிடல், நிதிக் கட்டுப்பாட்டுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறனை கண்காணிப்பதற்கும், அதன் பிரகாரம் அந்த முறைமையை ஆகக்பூர்வமானதாக அமுல்படுத்துவதற்கும் தேவையான பிரகாரம் மாற்றங்களைச் செய்வதற்கு அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்துகின்றோம்’’ எனக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர், பிரதான கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |

**2.3 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் இராஜாங்க அமைச்சிற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் தங்களுக்கு உதவியினை வழங்கும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நியமித்து நிறுவனத்தின் செயற்படுநிலையை தொடர்ச்சியாக மீளாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சிற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் மற்றும் கணக்காய்வு, முகாமைத்தவ குழு என்பன நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இராஜாங்க அமைச்சு வன சீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சிற்கு கையளித்ததன் அடிப்படையில் உரிய கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமணாக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(1) மற்றும் 104(3) | நட்டம் அல்லது இழப்பு ஏற்படுமாயின் உடனடியாக அதன் அளவு மற்றும் அதற்கான காரணங்களை தீர்மானித்து அதற்கு பொறுப்புவாய்ந்தவரை உறுதிப்படுத்த | வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு 2022.03.08 ஆந் திகதி முதல் வனசீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சிற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுமாயின் ஆரம்ப அறிக்கையொன்று உடனடியாக அனுப்ப வேண்டியிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இழப்பு நட்டம் ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விபத்து ஏற்பட்டு மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த போதிலும் 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கப்பட்டமையால் காணப்பட்ட குறைபாடுகளை பரீட்சித்து எதிர்காலத்தில் தேவையான படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 1642 | வாகனங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களினால் அல்லது உத்தியோகத்தர் இன்றி சாரதிகளினால் இடம்பெறுகின்ற சகல திடீர் விபத்துக்களும் அருகில் உள்ள பொலிசில் முறைப்பாடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 04 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய நிதி அமைச்சின் இலக்கம் 02/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான சகல வாகனங்களும் அந்த நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரகாரம் 05 வாகனங்களின் உரித்து 2022 ஏப்ரல் வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. மனித வள முகாமைத்துவம்**

------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில் வெற்றிடமாக 30 பதவிகள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 12 பதவிகளும், மூன்றாம் நிலையில் 01 பதவியும் மற்றும் ஆரம்ப நிலையில் 06 பதவிகளும் காணப்பட்டதுடன் சிரேஷ்ட நிலையில் மிகை 01 பதவியும் காணப்பட்டது. | மிகவும் சிறிய இட அளவொன்றில் இராஜாங்க அமைச்சு செயற்படுவதனால் அத்தியவசிய பதவிகளுகக்காக மாத்திரம் உத்தியோகத்தர்களை நியமித்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. | வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்பபினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |